# "யாதும் ஊரே யாவரும் கேளிர்" - புறநானூறு வழங்கும் மாபெரும் மனித நேய முழக்கம்

ச. சிங்காரவேலு

" யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலும் தணிதலும் அவற்றோரன்ன
சாதலும் புதுவது அன்றே; வாழ்தல்
இனிது என மகிழ்ந்தன்றும் இலமே. மின்னொடு
வானம் தண்துளி தலைஇ ஆனாது
கல் பொருது இரங்கும் மல்லல் பேர் ஆற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறை வழிப் படூஉம் என்பது திறவோர்
முறை வழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியின் தெளிந்தனம் ஆகலின் மாட்சியின்
பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே"
*கணியன் பூங்குன்றன்* (புறநானூறு, 192– ஆம் பாடல்)

மேற்கூறிய புறநானூற்றுப் பாடலின் கருத்தாவது, "எந்த ஊராயினும் அது நம் ஊரே; எல்லாருமே நமக்கு உறவினர் ஆவார். தீமையும், நன்மையும் நோதலும் (வருத்தமும்), அது தீர்தலும்(மகிழ்ச்சியும்) பிறரால் நமக்கு வருவதில்லை (அவை நம் செயல்களாலேயே விளைவதாகும்).

இவ்வுலகில் பிறந்து வாழ்பவர்களுக்குச் சாதல், அல்லது இறப்பு, புதியதல்ல (பிறப்பென்றால் இறப்பு உண்டு)
வாழ்தல் இனிது என்று மகிழ்தலும் இல்லை; வாழ்வினை வெறுத்து அது தீயது என ஒதுக்குவதுமில்லை

வானம் மின்னலுடன் குளிர்ந்த துளித்துளியாய்ப் பெய்யும் மழையானது மலைச்சாரல்களில் கற்களை மோதி ஒலி எழுப்புவதோடு அருவியாய்ப் பாய்ந்து தரையில் பெரிய ஆறாகப் பெருக்கெடுத்து ஓடும் போது அதில் மிதந்து செல்லும் மிதவை (அல்லது தெப்பம்) போல் உயிர்க்குலம் செல்லும் என்று கற்றறிந்து தெளிந்த பெரியோர்கள் உணர்ந்த உண்மையை நாம் அறிந்துள்ளோம்; ஆதலால், பெருமைக்குரிய பெரியோர்களைக் கண்டு வியப்பு அடைவதுமில்லை; பெருமையற்ற சிறியோர்களைக் கண்டு பழிப்பதுமில்லை. (அவரவர் ஒழுக்கமுடைமையை அல்லது ஒழுக்கமின்மையைப் புலப்படுத்தும் அவரவர் செயல்களைக் கருதி ஒழுகுவோம்.)

"*பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக் கல்*" (திருக்குறட்பா, 505)
(மக்களுடைய குணங்களாகிய பெருமைக்கும் மற்றக் குற்றங்களாகிய சிறுமைக்கும் தேர்ந்தறியும் உரைகல்லாக இருப்பவை அவரவருடைய செயல்களே ஆகும்.)

மேற்கூறிய பாடலின் ஒன்பதாவது அடியில் இடம் பெற்றுள்ள "நீர்வழிப் படூஉம் புணைபோல்" என்னும் உவமையை ஆராய்ந்து தெளிவதன் மூலம் அப்பாடலில் உணர்த்தப்படும் ஏனைய கருத்துக்களையும் நன்கு அறிந்து கொள்ள இயலும். "நீர்வழிப்படு உம் புணைபோல்", அல்லது "நீர்வழியே போகும் மிதவை, அல்லது தெப்பம் போல" என்னும் உவமையை விளக்கிக் கூறும் பழைய உரையாசிரியர்கள், 'அரிய உயிர் உடையோர் தத்தம் ஊழின் வழியே, அதாவது அவரவர் வினைப் பயன்/ கர்ம பலன் / தலை எழுத்து அல்லது தலைவிதிப்படியே செல்வர் / அல்லது வாழ்வர் என்னும் விளக்கத்தைக்

கூறியுள்ளனர்.

'ஊழ்' என்பது யாது ? ஒருவர் இவ்வுலகில் பிறந்து வாழும் போது செய்யும் நன்மை, தீமை முதலியவற்றின் பலன் அவர் தம் மறுபிறவியிலும் அவரைத் தொடர்கின்றது; அதுவே 'ஊழ்' எனப்படுவது; அது மற்றவர் யாரோ செய்யும் செயலின் விளைவு போன்ற தோற்றத்துடன் வருவதாயினும், ஒருவர் தம் வாழ்வில் அனுபவிக்கும் தீமையும் (வருத்தமும் ) நன்மையும் (மகிழ்ச்சியும்) அவர்தம் (முந்தைய) செயல்களின் பலனாகவே விளைவதாகும்; பிறரால் விளைவதில்லை, என்னும் கருத்து 'தீதும் நன்றும் பிறர்தர வாரா, நோதலும் தணிதலும் அவற்றோரன்ன' என்னும் அடிகளில் உணர்த்தப் படுகின்றது, என்பது பழைய உரையாசிரியர்களின் கருத்தாகும்.

இவ்வாறு பொருள் காணும் போது மனிதர் தம் அறிவாற்றலுக்கு ஏற்றவகையில் செயலாற்றும் திறனைப்பெற்றிருக்கவில்லை என்னும் கருத்தும் தோன்றுமல்லவா ? யாவும் ஊழின் வழியே தலைவிதிப்படியே நிகழுமாயின் 'நாம் செய்வதற்கு ஒன்றுமில்லை' என்னும் எதிர்மறை மனப்பான்மை – ஒருவகை தாழ்வு மனப்பான்மை – தோன்றவும் கூடும். அவ்வாறாயின் பழந்தமிழ் மக்கள் அனைவரும் 'எல்லாம் ஊழின் வழி / தலைவிதிப்படி நிகழும் என எண்ணி சும்மாயிருந்தனரா என்னும் கேள்வி எழுகின்றது. தமக்கென ஒரு செயலும் அற்று ஆற்றலும் அற்று 'ஊழ்' (தலைவிதி) எனக் கூறிவிட்டு ஊழின் வழியே எதிர்நோக்கி வாளா இருந்தவர்களா தமிழர்கள் ?

தமிழர்களின் வாழ்வியல் முறை அத்தகையதோர் எதிர்மறைப் பண்பினை உடையதாய் இருந்திருப்பின் அவர்கள் வாழ்வில் எந்த ஒரு முன்னேற்றத்தையும் அடைந்திருக்கமாட்டார்கள். மாறாக, தமிழர்களில் பெரும்பாலோர், தாமே முன்னின்று எண்ணியது முடித்தலே அவர் தம் மூச்சாக, உயிராக அமைந்தது என்று துணிந்துகூறலாம். இங்கு,

ஊழிற் பெருவலியாவுள மற்றொன்று
சூழினும் தான் முந்துறும்'' (திருக்குறள் 380)
(ஊழை விட மிக்க வலிமை உள்ளவை வேறு எவை உள்ளன ? ஊழை விலக்கும் பொருட்டு மற்றொரு வழியை ஆராய்ந்தாலும் அங்கும் தானே முன்வந்து நிற்கும்), எனக்கூறும் திருவள்ளுவரும்,

''ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்றுபவர்'' (திருக்குறள் 620)

(சோர்வு இல்லாமல் முயற்சியில் குறைவு இல்லாமல் முயல்கின்றவர், செயலுக்கு இடையூறாக வரும் ஊழையும் தோல்வியுறச் செய்பவர்)
என்று கூறியுள்ளதையும் ஒப்பு நோக்கற்பாலது.
எனவே, ''நீர்வழிப்படூஉம் புணை'' என்பதற்கு பழைய உரையாசிரியர்கள் கூறும் பொருளைத் தவிர வேறு பொருள் காணவும் இயலும் என்று கருத இடம் உள்ளது அல்லவா ?

புணை, அல்லது மிதவை என்பது ஆறுகளைப் போன்ற நீர்நிலையைக் கடப்பதற்குப் பயன்படும ஒரு கருவியாகும், ''நீர்வழி'' என்பதற்கு ''நீரைக் கடக்கும் வழி'' என்னும் பொருள் கொள்ளலாம். எனவே 'புணை' என்பதற்கு நீர்நிலையைக் கடப்பதற்கு பயன்படும் கருவி என்னும் பொருள் கொள்ளும் போது மேற்கூறிய புறநானூற்றுப் பாடலின் பொருள் சிறந்து விளங்கும் அல்லவா ?

அதாவது 'புணை' என்பது மிதவையாக நீரிடத்தே அகப்பட்டு நீரின் வழியே நீரால் இழுத்துச் செல்லபடுவது என்னும் பொருள் கொள்வதை விடுத்து, புணை என்பது ஆற்றினைக் கடந்து செல்லும் பணியை நிறைவேற்றுவதற்கென்று நீரிடையே உய்க்கப்படுவது என்று பொருள் கொள்வது சிறப்பாக இருக்கும்.

அவ்வாறாயின் 'புணை' என்பது மிதவையாக நீரிடத்தே அகப்பட்டு நீரின் வழியே நீரால் இழுத்துச் செல்லப்படுவது என்னும் பொருள் கொள்வதை விடுத்து, புணை என்பது ஆற்றினைக் கடந்து செல்லும் பணியை நிறைவேற்றுதற்கென்று நீரிடையே உய்க்கப்படுவது என்று பொரு கொள்வது சிறப்பாக இருக்கும்.

மனிதர்கள் இவ்வாறு இவ்வுலக வாழ்க்கையில் உய்க்கப்பட்ட பிறகு இவ்வுலக வாழ்க்கையை நடத்தும் பொறுப்பு அவர்களின் பொறுப்பாகின்றது. புணை தன் கடமையை நிறைவேற்றுவதை தவிர்க்க இயலாது, எனவேதான்,

''நீர்வழிப்படூஉம் புணை போல் ஆருயிர்
முறை வழிப்படூஉம்...''

என்று மேற்கூறிய புறநானூற்றுப் பாடலில் கூறப்படுகின்றது. அவ்வாறாயினும், இவ்வுலக வாழ்க்கை, வாழ்வின் வளத்திற்கும் ஆன்ம வளர்ச்சிக்கும் துணை செய்வதா அல்லது தடையாக உள்ளதா என்னும் வினா எழுந்த போது, பல பேரறிஞர்கள் தத்தம் கருத்துக்களைக் கூறினர். எடுத்துக்காட்டாக, புத்தர் பெருமான் இவ்வுலக வாழ்க்கையை 'துக்க சாகரம்' எனக் கருதி, இவ்வுலக வாழ்க்கையைத் துறந்தாலன்றி மனிதனுக்கு இன்பம் இல்லை என்றார்.

அது போலவே, சமணர் தலைவராகிய மகாவீரரும் இல்வாழ்வு என்பது ஆன்மிக வளர்ச்சிக்குத் தடையாக விளங்குவது என்றார். இல்லறத்தில் ஈடுபடுவதானது கல்லை கட்டிக் கொண்டு கடலைக் கடக்க முயல்வது போலாகும் என்பது அவர் கருத்து.

ஆனால் இல்லறவாழ்வின் நோக்கத்தினையும் இயல்பினையும் பழந்தமிழர் நன்கு ஆராய்ந்து உண்மையை அறிந்தவராதலால், புத்தர், மகாவீரர் போன்றவர்கள் கூறிய கருத்துக்களைப் பெரும்பாலான தமிழர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்றே புலப்படுகின்றது.

"ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து" (திருக்குறள் 48)

(மற்றவரையும் அற நெறியில் ஒழுகச் செய்து,
தானும் அறம் தவறாது ஒழுகும் இல்வாழ்க்கையானது,
தவம் செய்வாரை விட மிக்க வல்லமையுடைய
வாழ்க்கையாகும்), எனவும்,

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும் (திருக்குறள்: 50)

(உலகத்தில் வாழ வேண்டிய இல்லற நெறியில் நின்று வாழ்கின்றவன், வானுலகத்தில் உள்ள தெய்வ முறையில் வைத்து மதிக்கப் படுவான்), எனவும் திருவள்ளுவரும் இல்லற வாழ்க்கையைப் புகழ்ந்து கூறியுள்ளார்.

எனவேதான், துன்பக்கடலாகக் கருதப்படும் இல்லற வாழ்வு என்பது, இடர்ப்பாடுகள் சில உடையதாயினும், இல்லறத்தில் பங்கேற்கும் கணவன் மனைவி இருவரும் வெறும் காம உணர்ச்சியை அன்புக் காதலாகப் பெருக்கி இடர்ப்பாடுகளை நீக்கி இல்லற வாழ்வினை இன்ப சாகரமாக அமைக்கும் வல்லமை பெற்றிருந்த காரணத்தால், இவ்வுலக வாழ்வு

"இனிது என மகிழ்ந்தன்றும் இலமே முனிவின்
இன்னாது என்றலும் இலமே.."

என்னும் நடுநிலைக் கொள்கையை மேற்கொண்டு வாழ்ந்தனர் என்பதை மேற்கூறிய புறநானூற்றுப் பாடலில் புலவர் பெருமான் பூங்குன்றனார் உணர்த்தியுள்ளார்.

கணவன் மனைவியிடையே தோன்றி வளரும் தூய அன்புக்காதல் மேன் மேலும் வளர்ந்து அவர்தம் மக்களையும, உறவினரையும், சுற்றத்தாரையும, உலகினர் அனைவரையும் நேசிக்கும் பேரன்பாக தனக்கென வாழாது பிறர்க்கென வாழும் பேரன்பாக பரிணமித்து உயர்வதற்குரியது.

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது" (திருக்குறள்: 45)

(இல்வாழ்க்கை அன்பும் அறனும் உடையதாக விளங்குமானால் அந்த வாழ்க்கையின் பண்பும் பயனும் அதுவே ஆகும்) என்பது திருவள்ளுவர் வாக்கு.

மற்றவர்களின் இன்பத்தையும் துன்பத்தையும் தம்முடையதாகக் கருதி மற்றவர்களுக்குத் தம்மால் இயன்ற உதவி செய்து அவர்களின் இன்பத்தைப் பெருக்குவதும் துன்பத்தைத் துடைப்பதும் தம் வாழ்க்கையின் குறிக்கோளாகவும் கடமையாகவும் கொண்டபோது தான்,

**"யாதும் ஊரே யாவரும் கேளிர்"**

அதாவது ‘உலகம் எல்லாம் நம் ஊரே, இவ்வுலகில் வாழும் மக்கள் அனைவரும் உறவினரே’ என்னும் ஓர் அற்புதச் சிந்தனை தமிழன் ஒருவன் உள்ளத்தில் தோன்றிய தனிப் பெருந்தத்துவம் – மாபெரும் மனிதநேய முழக்கமாக எழுந்தது.

“யாதும் ஊரே யாவரும் கேளிர்”

என்று உதட்டு அளவிலோ எழுத்து அளவிலோ கூறினால் மட்டும் எந்த ஊரும் நம் ஊராகி விடுமா ? எல்லோரும் உறவினராகி விடுவார்களா ?

மற்றவர்கள், தம் நாட்டைச் சேர்ந்தவராயினும் பிற நாட்டைச் சேர்ந்தவர்களாயினும், அவர்களுக்குத் தம்மால் இயன்ற உதவியைச் செய்து அவர்கள் துன்பத்தை நீக்கி இன்பத்தைப் பெருக்குவதாலேயே அவர்கள் ‘கேளிர்’ அல்லது ‘சுற்றத்தார்’ என்னும் முறைமைக்கு உரியவராவார்.

இங்கு சங்க காலத்துத் தொகை நூலாகிய அகநானூறு எனப்படும் நூலில் இடம் பெற்றுள்ள **93**ஆம் பாடலில் கூறப்படும் கருத்தும் ஒப்பு நோக்கற் பாலது. நக்கீரனார் என்னும் புலவர் இயற்றிய அந்தப் பாடலின் முதல் மூன்று அடிகளாவன:

“கேள் கேடு ஊன்றவும் கிளைஞர் ஆரவும்
கேள் அல் கேளிர் கெழிஇயினர் ஒழுகவும்
ஆள் வினைக்கு எதிரிய ஊக்கமொடு புகழ் சிறந்து”
(அகநானூறு, 93:1–3)

இந்த மூன்று அடிகள், தம் கேளிராகிய உறவினருக்கு ஏற்பட்ட தீமையை அல்லது துன்பத்தை நீக்கி, அவர்களைப் பாதுகாத்துத் தாங்கிக் கொண்டு வறுமையுற்ற தம் கிளைஞர்களாகிய சுற்றத்தார் உண்பதற்கு வேண்டிய உணவினையும் தந்து உதவுவது போலவே, பொருள் தேடுவதற்கென்று தாம் புகுந்த மற்றொரு நாட்டில் உள்ள **‘கேள் அல் கேளிர்’** எனப்படும் அன்னியர்களையும் தம் உறவினர்களாகக் கருதி அவர்களின் துன்பத்தையும் துடைத்து அவர்களைக் காக்க வல்ல ஊக்கத்துடனும், (‘புகல் சிறந்து’, அதாவது மிகுதியான விருப்பத்துடனும்) செயலாற்றிய தமிழர்களைக் குறிக்கின்றன.

‘தமிழர் அன்பு’ என்பது உலகம் தழுவிய அன்பு; உலகத்தார் யாவரையும் கேளிராக (சுற்றத்தாராகக்) கருதி ஒழுகும் அன்பு என்பதை மேற்கூறிய அகநானூற்றுப் பாடலில் காணலாம்.

பண்டைக் காலத் தமிழர்கள், தம் முன்னோர்கள் தேடிய பொருளைக் கொண்டு வாழ விரும்பாமல், தாமே புதிதாகப் பொருளைத் தேட வேண்டும் என்னும் குறிக்கோளுடன் காடுகளைக் கடந்தும் நீரற்ற பாலை நிலத்தைக் கடந்தும், கடல்களைக் கடந்தும், பொருள் ஈட்டும் முயற்சியிலும் ஈடுபட்டனர் என்பதற்குரிய சான்றுகள் பல பண்டைய தமிழ் இலக்கிய நூல்களில் உள்ளன. (எடுத்துக்காட்டாக ‘பொருள் வயிற்பிரிதல்’ என்னும் உரிப்பொருளாவது பொருள் தேடுவதற்கென்று கணவன் தன் மனைவியை விட்டுத் தற்காலிகமாகப் பிரிதல் என்பதை உணர்த்துவதாக அமைந்தது; இத்துறையைச் சார்ந்த பாடல்கள் பல சங்க காலத்து அகத்துறை இலக்கிய நூல்களாகிய குறுந்தொகை, அகநானூறு, நற்றிணை முதலிய நூல்களில் உள்ளன.

தம் மனைவியை விட்டு, மக்களைவிட்டு, தம் உற்றார் உறவினரைவிட்டு, தம் நாட்டினரைவிட்டுப் பிற நாடுகளுக்குச் சென்று அந்நாட்டினரையும் கேளிராகக் கருதி அவர்களோடு நெருங்கிப் பழகியதால் தாம் தனியாக இருக்கின்றோம் என்னும் உணர்ச்சியின்றி அவர்களோடு ஒன்றுபட்டுப் பழகிய பெருமை தமிழர்களுக்குரியது.

மேலும் ‘தனக்கென வாழாமல் பிறர்க்கென வாழும்’ தமிழர் பண்பாட்டினை உணர்த்த வேண்டி, புலவர் பெருமான் கணியன் பூங்குன்றனார் தம் அரிய பாடலில் உவமையாகக் காட்டியுள்ள புணை அல்லது மிதவையும் தன்னலம் இல்லாதது, தனக்கென வாழாதது, பிறர்க்கென வாழ்வது; அப்புணை இன வேற்றுமை, சாதி வேற்றுமை, சமய வேற்றுமை, மொழி வேற்றுமையும் பாராமல், நீர் நிலையைக் கடப்பதற்குரிய கருவியாக பயன்படுவதாகும்.

அது போலவே, தமிழ்ப்பெருமக்களும், **“யாதும் ஊரே யாவரும் கேளிர்”** என்னும் அரும்பெரும் கோட்பாட்டை வாழ்வியல் குறிக்கோளாகப் போற்றி வாழ்ந்து வெற்றி கண்ட பெருமைக்குரியவர்கள் என்பதை மேற்கூறிய புறநானூற்றுப் பாடலும் அகநானூற்றுப் பாடலும் உணர்த்துவதாக உள்ளன. வாழ்க தமிழர் பண்பாடு !